**நவம்பர் – 04**

# TNPSC துளிகள்

- அயோத்தி தனது தீபாவளிக் கொண்டாட்டத்தின் போது, சரயு நதிக் கரையில் சுமார் 25 லட்சத்திற்கும் மிக அதிகமான எண்ணெய் (தீப) விளக்குகளை ஏற்றி, ஏறத்தாழ 1,121 பங்கேற்பாளர்களுடன் மிகப்பெரிய ஒரு வெகுஜன ஆரத்தி நிகழ்வினை நடத்தியதன் மூலம் இரண்டு கின்னஸ் உலக சாதனைகளைப் படைத்துள்ளது.
- இரயில்வே பாதுகாப்புப் படை (RPF), அதன் துணிச்சல் மிகு வீரர்களின் தியாகத்தைப் போற்றும் வகையில் வீர தீர எண்ணிம இணையதள நினைவிடத்தினைத் திறந்து வைத்துள்ளது.
- இமாச்சலப் பிரதேசத்தின் துர்கேஷ் ஆரண்ய விலங்கியல் பூங்காவானது, நிலையான மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த உள்கட்டமைப்பிற்காக இந்தியப் பசுமைக் கட்டிடச் சபையின் (IGBC) சான்றிதழைப் பெறும் இந்தியாவின் முதல் உயிரியல் பூங்காவாக மாற உள்ளது.
- இராஜஸ்தானின் ஜெய்ப்பூர் மாவட்டத்தில் உள்ள ஆந்தி என்ற கிராமம் ஆனது பசுமைத் தொழில்நுட்பத் திட்டங்களின் உதவியுடன் எந்தவிதக் கழிவுகளும் இல்லாத மாதிரி மாநிலமாகத் தன்னை மாற்றியுள்ளது.
- இந்தியக் கடற்படையின் கடற்படைப் புத்தாக்கம் மற்றும் உள்நாட்டுமயமாக்கல் அமைப்பின் (NIIO) மூன்றாவது கருத்தரங்கான ஸ்வவ்லம்பன் (Swavlamban) என்பது புது டெல்லியில் நடைபெற்றது.
- இந்தியாவில் நீரிழிவு நோயின் பரவலை மதிப்பிடுவதற்காக என்று இத்தகைய 'முதல் வகையான' 'ICMR-India Diabetes 'INDIAB' எனப்படும் உலகின் மிகப்பெரிய ஒரு ஆய்வின் தரவுகள் வெளியிடப்பட்டுள்ளன.
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற விவகாரங்கள் அமைச்சகம் ஆனது (MoHUA), 2024 ஆம் ஆண்டு அக்டோபர் 28 முதல் நவம்பர் 03 ஆம் தேதி வரை "ஸ்வச் தீபாவளி சுப் தீபாவளி" பிரச்சாரத்தினை மேற்கொண்டது.
    - தூய்மை பாரதம் என்ற திட்டத்தின் குறிக்கோள்களான தூய்மை மற்றும் நிலைத் தன்மையுடன் தீபாவளி பண்டிகைக் கொண்டாட்டத்தினை ஒருங்கிணைப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.


# தேசியச் செய்திகள்

## தேசியக் கையெழுத்துப் பிரதிகள் திட்டம் 2024

- மத்தியக் கலாச்சாரத் துறை அமைச்சகம் ஆனது தேசியக் கையெழுத்துப் பிரதிகள் திட்டத்தினை (NMM) "புதுப்பித்து மீண்டும் தொடங்க" உள்ளது.
- இந்தியாவில் உள்ள பண்டைய நூல்களைப் பாதுகாக்க உதவும் தன்னாட்சி அமைப்பை உருவாக்குவது குறித்தும் அது பரிசீலித்து வருகிறது.
- தற்போது, NMM ஆனது இந்திரா காந்தி தேசிய கலை மையத்தின் ஒரு பகுதியாக உள்ளது.
- தேசியக் கையெழுத்துப் பிரதிகள் ஆணையம் என்று பெயரிடப்பட உள்ள இந்தப் புதிய அமைப்பு ஆனது அமைச்சகத்தின் கீழான ஒரு தன்னாட்சி அமைப்பாக இருக்கும்.
- இன்று வரை 52 லட்சம் கையெழுத்துப் பிரதிகளின் மேல் நிலை தரவுகள் தயாரிக்கப் பட்டு சுமார் 3 லட்சத்திற்கும் அதிகமான தலைப்புகளில் எண்ணிம மயமாக்கப் பட்டு

உள்ளன என்று NMM தெரிவித்துள்ளது.

- இந்தியாவில் உள்ள 80% கையெழுத்துப் பிரதிகள் தனியார் /தனி நபரிடம் உள்ளன.




# சர்வதேசச் செய்திகள்


## இந்தியாவில் எண்ணிம உள்கட்டமைப்பு




- அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென் கொரியா ஆகியன ஒரு புதியக் கட்டமைப்பை அறிமுகப் படுத்துவதாக அறிவித்துள்ளன.
- இது இந்தியாவில் எண்ணிம உள்கட்டமைப்பிற்கான ஆதரவுகளை வழங்குவதற்காக இந்தியத் தனியார் துறை நிறுவனங்களுடன் ஒத்துழைப்பை அதிகப்படுத்துகிறது.
- இந்தியத் தனியார் துறை நிறுவனங்களுடன் இணைந்து DFC, JBIC மற்றும் கொரியா Eximbank ஆகிய நிறுவனங்களின் நெறிப்படுத்தப்பட்ட செயல்முறையை DiGi என்ற கட்டமைப்பு உருவாக்குகிறது.

- இந்தியாவில் உத்தி சார் எண்ணிம உள்கட்டமைப்பு ஒப்பந்தங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தேவையான ஆதரவை இது வழங்கும்.

## பொது உறுதிமொழி முன்னெடுப்பு




- ஐக்கிய நாடுகள் சபையானது, அமைதிச் செயல்முறைகளில் பெண்களின் பங்கேற்பு குறித்த பொதுச் செயலாளரின் ஒரு பொது உறுதிமொழி முன்னெடுப்பினை (Common Pledge) வெளியிட்டுள்ளது.
- இது உலகளவில் அமைதியை உருவாக்குவதிலும், அதனைக் கட்டியெழுப்புவதிலும் பெண்களின் பங்கை வலுப்படுத்துவதற்கான ஒரு புதிய முயற்சியாகும்.
- 2023 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் பெண்கள் அமைப்பின் தரவுகளின் படி, பெண்கள், சராசரியாக, சமாதான பேச்சுவார்த்தை அமைப்புகளில் 10 சதவீதத்திற்கும் குறைவாகவும், நடுவண் அமைப்புகளில் சுமார் 13.5 சதவீதத்திற்கும் குறைவான பங்கினையே கொண்டுள்ளனர்.
- இந்தப் பொது உறுதிமொழி முன்னெடுப்பு ஆனது, பல அமைதிச் செயல்முறைகளில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு உறுதியான நடவடிக்கைகளை எடுப்பதில் ஐக்கிய நாடுகள் சபையுடன் இணையுமாறு பல்வேறு உறுப்பினர் நாடுகள், பிராந்திய அமைப்புகள் மற்றும் நடுவண் விவகாரங்களில் தீவிரமாக ஈடுபட்டுள்ள இன்ன பிற அமைப்புகளை வலியுறுத்துகிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## GTRI அறிக்கை

- இந்தியாவின் மின் துறையானது மின்சார மோட்டார்கள் (இயக்கிகள்) மற்றும் மின் மாற்றிகளுக்கு அத்தியாவசியமான CRGO எஃகிற்கான 30 சதவீதப் பற்றாக்குறையை எதிர்கொள்கிறது என்று உலக வர்த்தக ஆராய்ச்சி முன்னெடுப்பு (GTRI) அறிக்கை தெரிவித்துள்ளது.

- ❖ மின்மாற்றிகள் மற்றும் மின் இயக்கிகள் தயாரிப்பதற்குப் பயன்படுத்தப்படும் மிக குளிர்ந்த வெப்பநிலையில் படலங்களாகச் செயல்முறையாக்கப்பட்ட பல்வேறு படிக மூலக்கூறுகளின் அமைவினைச் சார்ந்த (CRGO) பெரும் எஃகுப் பற்றாக்குறையானது இந்தியாவின் உயர் இலட்சிய மிக்க மின் துறை விரிவாக்கத் திட்டங்களைப் பாதிக்கக் கூடும்.
- ❖ உள்நாட்டு உற்பத்தித் தேவையில் 10-12 சதவீதம் மட்டுமே பூர்த்தி செய்யப்படுவதால், இந்தியா இறக்குமதியை பெரிதும் சார்ந்துள்ளது.
- ❖ 2024 ஆம் நிதியாண்டில், மிகப்பெரியதொரு CRGO எஃகு நுகர்வோரில் ஒன்றான இந்தியாவிற்கு 400,000 டன்கள் தேவை ஏற்பட்டது.
- ❖ உள்நாட்டில் 50,000 டன்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்ட நிலையில், சீனா, ஜப்பான், ரஷ்யா மற்றும் தென் கொரியா போன்ற நாடுகளில் இருந்து 239.2 ஆயிரம் டன்களை இந்தியா இறக்குமதி செய்ய வேண்டியிருந்தது.
- ❖ 11.4 ஆயிரம் டன்கள் ஏற்றுமதி செய்ததையடுத்து, உள்நாட்டுப் பயன்பாட்டிற்கு 277.8 ஆயிரம் டன்கள் மட்டுமே கிடைத்ததால், 122.2 ஆயிரம் டன்கள் பற்றாக்குறையாக உள்ளது.

**INDIA-GLOBAL IMPORTS OF CRGO AND ELECTRICAL STEEL**

| Steel items | Values in US$ Million | | | Quantity in thousands Tonnes | | |
|---|---|---|---|---|---|---|
| | 2022-2023 | 2023-2024 | % Growth | 2022-2023 | 2023-2024 | % Growth |
| Flat-rolled products of silicon-Electrical steel grain oriented (Width>600 mm) | 617.90 | 570.70 | -7.6 | 191.4 | 236.5 | 23.6 |
| Other Flat-rolled products of Silicon electrical steel (Width>600 mm) | 108.50 | 101.61 | -6.4 | 75.4 | 74.3 | -1.5 |
| Flat-rolled products of silicon electrical steel grain-oriented (Width <600 mm) | 15.67 | 5.77 | -63.2 | 6.9 | 2.7 | -60.9 |
| Other Flat-rolled products of Silicon electrical steel (Width<600 mm) | 2.52 | 1.23 | -51.2 | 1.1 | 0.4 | -63.6 |
| Total | 744.59 | 679.31 | -8.8 | 274.8 | 313.9 | 14.2 |

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஈரநிலங்களின் புதிய மதிப்பீடு

**Table 2 – NBSAPs submitted per region**


| Region | NBSAPs submitted |
|---|---|
| Asia | 7 |
| Africa | 2 |
| Oceania | 1 |
| North America | 2 |
| Latin America and the Caribbean | 2 |
| Europe | 10 |

- ❖ 35 பெர்சன்ட் (சர்வதேச ஈரநிலங்கள் அமைப்பின் மூலம் நியமிக்கப்பட்ட) என்ற ஒரு அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மதிப்பீடு ஆனது, 15வது பங்குதாரர்கள் மாநாட்டிற்குப் பிறகு (COP15) சமர்ப்பிக்கப்பட்ட NBSAP என்ற திட்டத்தில் ஈரநிலங்களின் பங்கை எடுத்துக் காட்டுகிறது.

- குன்மிங்-மாண்ட்ரீல் உலகளாவிய பல்லுயிர்ப்பெருக்க கட்டமைப்பிற்கு (KMGBF) நன்கு இணங்க உறுப்பினர் நாடுகள் தங்கள் NBSAP திட்டங்களை மறுபரிசீலனை செய்ய வலியுறுத்தப்பட்டுள்ளன.
- KMGBF ஆனது 2030 ஆம் ஆண்டிற்குள் பல்லுயிர்ப் பெருக்க இழப்பை நிறுத்தவும் அதனை மீட்டெடுப்பதற்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது.
- இந்த மதிப்பீட்டில் உலகெங்கிலும் உள்ள 24 NBSAP திட்டங்கள் அடங்கும் என்பதோடு இது பல்லுயிர்ப் பெருக்கம் தொடர்பான உடன்படிக்கையின் உறுப்பினர்களாக உள்ள 196 நாடுகளில் 12 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது.
- பெரும்பாலான மறுபரிசீலனைச் சமர்ப்பிப்புகள் ஆனது ஐரோப்பாவிலிருந்தும் (10), அதைத் தொடர்ந்து ஆசியா (7), ஆப்பிரிக்கா (2), வட அமெரிக்கா (2), இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரீபியன் (2) மற்றும் ஓசியானியா (1) ஆகியவற்றிலிருந்தும் சமர்ப்பிக்கப் பட்டுள்ளன.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## பாதுகாக்கப்பட்ட புவிக் கிரகம் அறிக்கை 2024





- 2024 ஆம் ஆண்டு பாதுகாக்கப்பட்ட புவிக் கிரக அறிக்கையானது 16வது பங்குதாரர்கள் (COP16) மாநாட்டின் போது வெளியிடப்பட்டது.
- பாதுகாக்கப்பட்ட மற்றும் வளங்காப்புப் பகுதிகளின் உலகளாவிய ஒரு பரவல் ஆனது தற்போது 17.6 சதவீத நிலப்பரப்பு மற்றும் உள்நாட்டு நீர் நிலைகள் மற்றும் 8.4 சதவீத கடல் மற்றும் கடலோரப் பகுதிகள் என்ற அளவினை எட்டியுள்ளது.
- இதில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு இலக்கை அடைய 2030 ஆம் ஆண்டில் நிலப்பரப்பிலான பாதுகாப்பினை இரட்டிப்பாக்க வேண்டும் மற்றும் கடல் பகுதிகளில் அதனை மூன்று மடங்காக அதிகரிக்க வேண்டும்.
- 16.64 சதவீத நிலம் மற்றும் உள்நாட்டு நீர்நிலைச் சுற்றுச்சூழல் அமைப்புகளும், 7.74 சதவீதக் கடலோர நீர் மற்றும் பெருங்கடலும் பாதுகாக்கப்பட்டுள்ளன.
- இதில் 51 நாடுகள் மற்றும் பிரதேசங்கள் நிலப்பரப்பிலான பாதுகாப்பில் சுமார் 30 சதவீத இலக்கினையும், 31 நாடுகள் கடல் பரப்பு சார் பாதுகாப்பில் சுமார் 30 சதவீத இலக்கையும் தாண்டியுள்ளன.

- இதேபோல், நான்கில் ஒரு பகுதி சுற்றுச்சூழல் பகுதிகள் மட்டுமே 30 சதவீதத்திற்கும் அதிகமானப் பாதுகாப்பைக் கொண்டுள்ளன.
- கடல் சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகளைப் பொறுத்தவரை, பெருங்கடலின் 2.8 சதவீதம் மட்டுமே முழுமையாக அல்லது மிகவும் பாதுகாக்கப்பட்ட கடல் சார் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக உள்ளன.
- பாதுகாக்கப்பட்ட மற்றும் வளங்காப்பு பகுதிகளில் சுமார் 3.95 சதவிகிதம் மட்டுமே பழங்குடியின மக்கள் மற்றும் உள்ளூர் சமூகங்களால் (IPLC) நிர்வகிக்கப்படுகின்றன.
- 11.84 சதவீதம் மட்டுமே பகிரப்பட்ட நிர்வாகத்தின் கீழ் உள்ளன.

## புதுப்பிக்கத் தக்க ஆற்றல் மற்றும் வேலைவாய்ப்புகளின் வருடாந்திர ஆய்வு அறிக்கை 2024

Figure 2 Solar PV (2a) and wind (2b) capacities, China and other top 10 countries, plus rest of the world: New additions and cumulative capacities as of 2023





- சர்வதேச புதுப்பிக்கத்தக்க எரிசக்தி முகமை (IRENA) ஆனது, "புதுப்பிக்கத்தக்க ஆற்றல் மற்றும் வேலைகள்" என்ற தலைப்பில் அதன் வருடாந்திர மதிப்பாய்வு (2024) என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.
- 2022 ஆம் ஆண்டில் 13.7 மில்லியனாக இருந்த உலகளாவியப் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் (RE) பணியாளர் வளங்களின் எண்ணிக்கை ஆனது தற்போது சுமார் 16.2 மில்லியனாக அதிகரித்துள்ளது.
- 2023 ஆம் ஆண்டில், இந்தியாவில் சுமார் 1.02 மில்லியன் புதுப்பிக்கத்தக்க ஆற்றல் துறை சார்ந்த வேலைவாய்ப்புகள் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.
- இந்தியாவில் புதுப்பிக்கத்தக்க துறையில் நீர் மின்னாற்றல் மிகப்பெரிய வேலை வாய்ப்பளிக்கும் துறையாக இருந்தது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து சூரிய ஒளி மின்னழுத்த (PV) துறை இடம் பெற்றுள்ளது.

- இந்தியா 2023 ஆம் ஆண்டில் 9.7 GW அளவிலான சூரிய ஒளி மின்னழுத்த ஆற்றல் PV திறனை உற்பத்தி செய்துள்ளது என்பதோடு, புதிய நிறுவல்கள் மற்றும் ஒட்டு மொத்த திறனில் உலகளவில் இந்தியா ஐந்தாவது இடத்தைப் பிடித்தது (2023 ஆம் ஆண்டின் இறுதியில் 72.7 GW அளவினை எட்டியது).
- 2023 ஆம் ஆண்டில் மின் பகிர்மானக் கட்டமைப்புடன் இணைக்கப்பட்ட சூரிய ஒளி மின்னழுத்த ஆற்றல் துறையில் இந்தியாவில் 2.38 லட்சம் வேலைவாய்ப்புகள் இருந்தன.
- இந்தியாவின் காற்றாலை உற்பத்தித் திறன் ஆனது 2023 ஆம் ஆண்டில் 44.7 GW திறனை எட்டியது (உலக அளவில் நான்காவது இடம்) என்பதோடு 2.8 GW திறன் என்பது உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## பிபேக் தேப்ராய்

- 2017 ஆம் ஆண்டு முதல் பிரதமரின் பொருளாதார ஆலோசனைக் குழுத் தலைவராக இருந்த எழுத்தாளரும் பொருளாதார நிபுணருமான பிபேக் தேப்ராய் காலமானார்.
- அவர், முந்தையத் திட்ட ஆணையத்திற்குப் பதிலாக நிறுவப்பட்ட நிதி ஆயோக் அமைப்பின் உறுப்பினராகவும் இருந்தார்.
- அவர் பகவத் கீதை, வேதங்கள், இராமாயணம் மற்றும் மகாபாரதம் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளார்.
- அவர் 1997 மற்றும் 2005 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில் இராஜீவ் காந்தி தற்கால ஆய்வுகள் கல்வி நிறுவனத்தின் (RGICS) இயக்குநராகவும் பணியாற்றினார்.




# முக்கிய தினங்கள்

## தமிழ்நாடு மாநிலம் உருவான தினம் 2024 - நவம்பர் 01


- பாரம்பரியமாக, நவம்பர் 01 ஆம் தேதியானது மாநில மறுசீரமைப்புத் தினமாக அனுசரிக்கப் படுகிறது.
- 1956 ஆம் ஆண்டு நவம்பர் 01 ஆம் தேதியன்று, இந்தியாவில் மொழிவாரி மாநில மறு

சீரமைப்பு மேற்கொள்ளப்பட்டது.

- இந்தச் செயல்முறையின் போது, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகா மற்றும் கேரளாவின் சில பகுதிகள் அப்போதைய மதராஸ் மாநிலத்திலிருந்து "பிரிந்துச் சென்றன".
- பின்னர் C.N. அண்ணாதுரை அவர்கள் இதன் முதலமைச்சராக இருந்த போது, 1967 ஆம் ஆண்டு ஜூலை 18 ஆம் தேதியன்று சென்னை மாநிலம் தமிழ்நாடு எனப் பெயர் மாற்றப் பட்டது.




## ஊடகவியலாளர்களுக்கு எதிரான குற்றங்களுக்கான தண்டனையின்மையை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான சர்வதேச தினம் - நவம்பர் 02




- ஊடகவியலாளர்களைப் பாதுகாக்கவும், அவர்களுக்குத் தீங்கு விளைவிப்பவர்களை நீதியின் முன் நிறுத்தவும் வேண்டிய அவசரத் தேவையை நிவர்த்தி செய்வதில் இந்த நாள் கவனம் செலுத்துகிறது.
- கருத்துச் சுதந்திர உரிமைக்காகப் போராடவும், உண்மையைப் வெளிக் கொணரும் முயற்சியில் உயிர் இழந்தவர்களைக் கௌரவிக்கவும் இந்த நாள் அனுசரிக்கப்

படுகிறது.

- 2013 ஆம் ஆண்டு நவம்பர் 02 ஆம் தேதியன்று மாலி நாட்டில் இரண்டு பிரெஞ்சு ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டதை நினைவு கூரும் வகையில் இந்த தேதி தேர்ந்தெடுக்கப்பட்டது.
- 2006 மற்றும் 2024 ஆகிய ஆண்டுகளுக்கு இடையில், உலகம் முழுவதும் சுமார் 1,700 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.
- 2024 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, “Safety of Journalists in Crises and Emergencies” என்பதாகும்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★